தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 15, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 29, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை."

ஒருபொழுதும் சோர்வு இல்லாத ஊக்கம் உடையவரிடத்தில் செல்வமானது தானே அவர் இருக்கும் இடம் தேடி வழி கேட்டு வந்து சேரும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

241—

தார்ச் சாலை அமைத்தல்

***5551—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், வால்குழிப்பட்டி முதல் பெரியகோம்பை வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 29

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சி. சந்திரசேகரன் அவர்கள், அவருடைய ஊராட்சி ஒன்றியத்திலிருக்கிற பகுதிகளுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், திருப்புளிநாடு ஊராட்சியில் வால்குழிப்பட்டி முதல் பெரியகோம்பை வரையிலான சாலை நாய்க்கன்கோம்பை காப்புக் காட்டின் வழியே செல்கின்றது. இச்சாலையானது காப்புக் காடு வரையில் தார்ச் சாலையாகவும், காப்புக் காட்டிற்குள் சுமார் 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு 10 அடி அகலத்தில் மண் சாலையாகவும் அமைந்துள்ளது. காப்புக் காட்டுக்குள் இந்த மண் சாலை அனுமதிக்கப்பட்ட வழித்தடமாக இல்லை என்பதால், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி உரிய முறையில் விண்ணப்பிக்கும்பட்சத்தில் வனத் துறையின்மூலம் சாலை அமைக்க அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்க்கை வாழ்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றுவிட்டு, நம்மிடமிருந்து பிரிந்து சென்றாலும் மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், குடும்ப தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மேலும், அம்மா அவர்கள் அரசின் அனைத்துத் திட்டங்களையும் தமிழக மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற வகையில், அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, உழைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய அரசுக்கு பல்வேறு சோதனைகள் வந்தன. அந்தச் சோதனைகளையெல்லாம் இன்றைக்கு சாதனைகளாக மாற்றிக்கொண்டிருக்கின்ற சாதனைச் செம்மல்

2018 ஜூன் 29]

(மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக நின்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நம்முடைய துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வரும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இங்கே நடுநிலை நாயகராக செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவரான தங்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியையும், வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலைப் பகுதி, 266 குக்கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. அந்தப் பகுதியில் திருப்புளிநாடு ஊராட்சியில் அமைந்திருக்கின்ற வால்குழிப்பட்டி கிராமம் ஒரு தனி தீவு போல அமைந்திருக்கிறது. தீவு என்று சொன்னால் நான்கு பக்கமும் கடல் இருக்கும். ஆனால், அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் மலையிலிருக்கின்ற எந்தப் பகுதியிலிருந்து பார்த்தாலும் அந்தக் கிராமம் தெரியாது. நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், வனப் பகுதியிலிருக்கின்ற அந்தக் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைத்துத் தந்ததால், அந்தப் பகுதி மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள். இருந்தாலும், அந்த வால்குழிப்பட்டி கிராம மக்கள், வால்குழிப்பட்டியிலிருந்து பெரியகோம்பை பகுதிக்கு செல்வதானால் வனக் காப்புக் காட்டில் கிட்டத்தட்ட 1,800 மீட்டர் தூரம் செல்ல வேண்டும். அந்தப் பகுதிக்கு தார்ச் சாலை வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகின்றார்கள். அந்தச் சாலை அமைப்பதன்மூலம் திருப்புளிநாடு ஊராட்சி, அரியூர்நாடு ஊராட்சி, குண்டூர்நாடு ஊராட்சி போன்ற பகுதிகளிலிருக்கின்றவர்கள் எல்லாம் அங்கே விளைவிக்கக்கூடிய பொருட்களான மா, பலா போன்ற பழ வகைகளையும், மரவள்ளிக் கிழங்கு, மிளகு, காபி போன்ற பொருட்களையெல்லாம் சமவெளிப் பகுதிக்கு குறைந்த வாடகையில் எடுத்துச் செல்ல பயன்படக்கூடிய வகையில் அந்தச் சாலை அமையும். அதனால் மலைவாழ் மக்களும் பயனடைவர். நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் வனத் துறையின் அனுமதியைப் பெற்று, அந்தச் சாலையை அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு

முதலமைச்சர் அண்ணன் அவர்களும் இதுபற்றி ஏற்கெனவே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கின்றார்கள். இங்கே உள்ள வனத் துறை சம்பந்தப்பட்ட சாலைகளையெல்லாம் அதிகாரிகளை அழைத்து வந்து ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக வருகின்ற காலக்கட்டத்தில், இந்த நிதியாண்டிலேயே வனத் துறை அமைச்சகத்தின் அனுமதி பெற்று இந்தச் சாலையையும் அமைத்துக் கொடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சந்திரசேகரன், இருங்கள். இப்போதுதான் முதல் கேள்வியை ஆரம்பித்திருக்கிறேன். முதல் வினாவில், இன்னொரு துணை வினா இருக்கிறது. இதற்கே ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டீர்களென்றால் எப்படி? மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியைப் பற்றித்தான் என்னுடைய பதிலில் கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்த மண் சாலையானது மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தாலும், அதனை தார்ச் சாலையாக மேம்படுத்தும்போது, வழிக்கான அனுமதி உரிமம் இருக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட சாலைக்கு வழிக்கான அனுமதி உரிமம் இல்லாததால், சாலை அமைக்க விரும்பும் துறை உரிய வழிமுறையின்படி விண்ணப்பிக்கும்பட்சத்தில் அனுமதி பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை வனத் துறை மேற்கொள்ளும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் அனுமதியைப் பெற்று தார்ச் சாலை அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் இது குறித்து எழுத்துப்பூர்வமாகக்

2018 ஜூன் 29]

கொடுத்திருக்கிறேன். அரியூர்நாடு ஊராட்சியில் அமைந்துள்ள அரியூர்கஸ்பா கிராமத்தில் மூன்று கிலோ மீட்டர் சாலை மண் சாலையாக உள்ளது. அந்தச் சாலையினையும், தின்னனூர்நாடு ஊராட்சியில் இருக்கின்ற கற்றாழைப்பாறை கிராமத்திற்கு தார்ச் சாலை வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். ஏற்கெனவே மக்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கும் சாலை அது. மாநில அரசாங்கமே செய்துகொடுக்கும் நிலை இருக்கிறது. எனவே, நம்முடைய வனத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து நிச்சயமாக இந்த நிதியாண்டிலேயே அந்த இரண்டு சாலைகளையும் அமைக்க நிதியொதுக்கீடு செய்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் இருந்த நேரத்தில், போதமலை கிராமத்தில் தார்ச் சாலை அமைப்பதற்கு நிதியொதுக்கீடு பெற்று, நெடுஞ்சாலைத் துறை மூலமாக அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வனத் துறை அனுமதி கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் எங்களிடம் கையொப்பம் வாங்கியிருக்கிறார்கள். விரைவில் கிடைத்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதிக்கும் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினரான, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். எனவே, போதமலை கிராமத்திற்கும் இந்த நிதியாண்டில் சாலை வசதி செய்து கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் நான் உங்களுக்கு ஒரு நல்ல வழியை விட்டுவிட்டு வந்திருக்கிறேன். அதைப் பின்பற்றினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து சாலை வசதியைப் பெற்றுவிடலாம். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அரியூர்நாடு ஊராட்சி, அரியூர்கஸ்பா கிராமத்திற்கு கொல்லிமலையில் சோளக்காடு முதல் எருமநாடி வரை செல்லும் தார்ச் சாலையில் 5.8-வது கிலோ மீட்டரிலிருந்து பிரிந்து ஆரியூர்சோலை காப்புக் காடு வழியாக அரியூர்கஸ்பா கிராமத்திற்கு காப்புக் காடு வரையில் தார்ச் சாலையாகவும்,

காப்புக் காட்டினுள் செல்லும் பகுதி மண் சாலையாகவும் அமைந்துள்ளது. இந்த மண் சாலை 4.3 கிலோ மீட்டர் நீளம் மற்றும் 9 அடி அகலத்தில் அமைந்துள்ளது. இந்தப் பாதை அனுமதிக்கப்பட்ட வழித்தடமாகும். Right of way உள்ளது. எனவே, தார்ச் சாலை அமைக்க மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். அதை அமைப்பதற்கு எந்த user agency வருகிறார்களோ, அவர்கள், வனத் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசினால் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, நிதியாதாரத்தைப் பொறுத்து, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களின் தொகுதியாக அப்பகுதி இருந்தபோது ஏற்கெனவே அவர் காட்டியிருக்கின்ற வழியைப் பின்பற்றி, உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சாலையை அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தொகுதியைப் பார்த்தீர்களென்றால், எப்போதுமே வெயிலூராக இருக்கின்றது. அதனால் வெயிலூரை மாற்ற வேண்டுமென்று சொன்னால், பெருமுகை மலையிலும், சத்துவாச்சாரி மலையிலும், சலவன்பேட்டை மலையிலும் நிழலூராக அந்தப் பகுதியை மாற்ற வேண்டுமென்று சொன்னால், வனத் துறை சார்பில் செடிகள், மரங்களை வளர்த்தால் வெயிலூர் நிழலூராக மாறும். அரியூரில் தங்கக் கோயிலைப் பார்த்தீர்களென்றால், மலைக்கோயில் சக்தியம்மா அவர்களால் அரியூர் மலையிலெல்லாம் செடிகள் நடப்பட்டு அவை மரங்களாக வளர்ந்திருக்கின்றன. வேலூரில் மழை பொழியவில்லையென்றாலும், அரியூரில் மழை பொழிகிறது. அதுபோல் வேலூரிலுள்ள மலைகளிலும் செடிகள் நட்டு, மரங்கள் நிறைந்ததாக மாற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 29]

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்கள், இதைப்போலவே எங்கள் திண்டுக்கல் நகரத்தில் இருக்கின்ற பெரிய மலையிலும், பழனி கோயில் இருக்கின்ற பெரிய மலையிலும் செடிகள் நடுவதற்கு சென்ற நிதியாண்டில் நிதியொதுக்கி அங்கே செடிகள் நடப்பட்டதால் அதற்குரிய நல்ல பலனை அப்பகுதிகள் இந்த வருடம் பெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதிக்கு வனத் துறை அதிகாரிகளை அனுப்பி, நிதி ஆதாரத்தைப் பொறுத்து மலைப் பகுதியிலே செடிகள் நடுவதற்குரிய சூழ்நிலை குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை பகுதிக்கு அருகில் இருக்கிற விஜயமங்கலத்திற்கு அருகில் அரசம்மாமலை என்கிற வனப் பகுதி இருக்கிறது. அங்கே 2000 ஆண்டுகளுக்கு முன்பாக விஜயநகரப் பேரரசர்களால் அக்னீஸ்வரர் என்கிற திருக்கோயில் கட்டப்பட்டு, அங்கு வாழ்ந்த மக்கள் வழிபட்டு வந்ததாக வரலாறு கூறுகிறது. அந்தக் கோயில் அமைந்துள்ள மலைப் பகுதியிலே உள்ள சித்தர்கள் எல்லாம் அந்தக் கோயிலுக்கு வந்து கடவுளை வழிபட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. தற்போது அந்த மலைப் பகுதியிலுள்ள திருக்கோயில் சிதிலம் அடைந்திருக்கிறது. வனத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட வன விலங்குகள் எதுவும் அந்தப் பகுதியிலே கிடையாது. அந்தக் கோயிலுக்கு சென்று வழிபட்டால் நினைத்த காரியம் நினைத்தபடி நடக்கும் என்ற நம்பிக்கை அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி மக்கள் அந்தத் திருக்கோயிலுக்கு எளிதாகச் சென்று வழிபடுவதற்கு ஏற்ற வகையில் அந்தக் கோயிலைச் சீரமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அந்தக் கோயிலுக்குச் சென்று வழிபடுவதால் தாங்கள் எண்ணிய காரியங்கள் நிறைவேறும் என்று அந்த மக்கள் நம்புகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்து கொடுக்கிறபொழுது, மாண்புமிகு அமைச்சர்

அவர்களும் என்ன நினைக்கிறார்களோ அதையும் கட்டாயமாக அந்த அக்னீஸ்வரர் செய்து கொடுப்பார் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்த அக்னீஸ்வரர் திருக்கோயிலினுடைய திருப்பணியைச் செய்வதற்கு வனத் துறையினுடைய அனுமதியை பெற்றுத் தருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திருக்கோயிலுக்குச் சென்றால் கேட்டது கிடைக்கும், நினைத்த வேண்டுதல் நடக்கும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இருப்பதை வைத்து சிறப்புடன் வாழ வேண்டுமென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியிருக்கிற வழியில்தான் நான் நடந்து கொண்டிருக்கிறேன். அகலக்கால் வைப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னென்ன தேவை இருக்கிறதோ அவர் அடிக்கடி அந்தக் கோயிலுக்குச் சென்று வழிபட்டு இந்த அரசு நன்றாக இருக்க வேண்டும், எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட நாம் அத்தனை பேரும் சிறப்பாக இருக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுதலை வைத்து, எதிரிகள் தூள் தூளாக வேண்டும் என்ற ஒரு கோரிகையையும் நீங்கள் வைக்க வேண்டுமென்று வனத் துறையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் divert செய்துவிட்டார்கள். அதனால், அவர்கள் முழுமையாகக் கவனிக்க முடியவில்லை,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் பேசியதை நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *கேட்டதெல்லாம் கிடைக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்போது இனிமேல் அவருடைய வழியையே பின்பற்றலாம். ஆனாலும், அதில் எனக்கு நம்பிக்கையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கோயிலை வனத் துறையின் மூலமாக*

2018 ஜூன் 29]

ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

இருபாலர் பள்ளியைப் பிரித்தல்

***35450—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் உள்ள இருபாலர் மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியென இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியை பெண்களுக்காகத் தனியாகப் பிரித்து மேல்நிலைப் பள்ளி உருவாக்கப்படுமா என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. நேரடியாக மேல்நிலைப் பள்ளியைப் பிரிக்க இயலாது. ஏதேனும் ஒரு உயர்நிலைப் பள்ளி இருந்தால் அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு அடுத்த ஆண்டில் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“ஈதல் இசைபட வாழ்தல்; அதுஅல்லது